III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

MCOP. 7/2022

Deposition of witness for the Plaintiff/PW1
Respondent solemnly by Thiru.P.Kothandaraman, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 20-03-2024

| | | | |
|---|---|---|---|
| Name | : N.Muniyandi | Village | : |
| Father's Name | : Nagamuthu | Taluk | : |
| Age | : | Calling | : |

பிரமாண பத்திரத்தின் தொடர்ச்சியாக முதல் விசாரணை

நான் மனுவின் மனுதாரர். நான் சொல்லக் கூடிய சங்கதிகளை சத்திய பிரமாணம் செய்து எழுத்து பூர்வமாக தாக்கல் செய்கிறேன். அதை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். மேலும் எனது தரப்பில் 10 ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன். அவற்றின் விவரங்கள் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவை, ம.த.சா.1 முதல் 10 வரை ஆகும். நான் இந்த வழக்கில் கேட்டுள்ளபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

இரண்டாம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

விபத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. விபத்து சம்மந்தமாக காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. எனது மகன் பூந்தமல்லியில் உள்ள ஒரு நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தார். அவர் மாத சம்பளமாக ரூ.15,000 ஈட்டி வந்தார். அவர் பார்த்து வந்த தொழில் மற்றும் சம்பளம் குறித்தான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது மகன் விபத்தின் போது வேலை எதுவும் பார்த்து வரவில்லை என்றும் வருமானம் எதுவும் ஈட்டி வரவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. விபத்தில் இரண்டு வாகனங்கள் சம்மந்தப்பட்டுள்ளது எனக்கு தெரியும். விபத்தின் போது எனது மகன் ஓட்டி சென்ற இரண்டு சக்கர வாகனத்தில் கார் மோதி அவர் கீழே விழுந்த பின்னர் தான் விபத்து ஏற்பட்டது என்றும் அதன் காரணத்தினால் தான் எனது மகன் இறந்துவிட்டார் என்றும் ஆதலால் காரின் ஓட்டுநர் கவனக்குறைவினால் தான் விபத்து நடைபெற்றது என்றும் லாரியின் ஓட்டுநர் விபத்திற்கான காரணமானவர் அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. காருக்கு காப்பீடு ஏதும் இல்லாததினால் லாரியின் ஓட்டுநரின் மீது கவனக்குறைவு என்று பொய்யாக கூறி இம்மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. காரின் உரிமையாளர் மற்றும் ஓட்டுநரின் மீது தான் நான் இழப்பீடு கேட்க வேண்டும் என்றும் இரண்டாவது எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க

கடமைப்பட்டவர் அல்ல என்றும் சொன்னால் எனக்கு அது பற்றி தெரியாது.

<u>மூன்றாம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. போலீசார் சொல்லி தான் எனக்கு தெரியும். விபத்திற்கு யார்மீது தவறு உள்ளது என்பது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. எனது மகன் இரண்டு சக்கர வாகனத்தை கவனக்குறைவாக ஓட்டி சாலையில் உள்ள பள்ளத்தில் செல்லும் போது பிரேக்கை திடீரன்று பிடித்தால் அவர் கீழே விழுந்துவிட்டார் என்றும் அதன் காரணமாக அவர் லாரியின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றும் ஆதலால் லாரி ஓட்டுநரின் மீது தான் கவனக்குறைவு ஏதும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. லாரி வேகமாக செல்லாதிருந்திருந்தால் விபத்தே ஏற்பட்டிருக்காது என்றால் நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை.

(நான்காவது எதிர்மனுதாரர் அழைக்கப்பட்டும் ஆஜராகாததினாலும் அவர் தரப்பில் எந்த பிரதிநிதித்துவம் இல்லை என்பதினாலும் அவர் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை என கருதி சாட்சியின் சாட்சியம் முடிக்கப்படுகிறது).